2019 ஜூலை 19]

மாவட்டத்திலே கால்நடை மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அதற்குத் தேவையான நிலங்கள், அதேபோல பல்வேறு கருத்துகளை கடந்த முறை நான் சொல்லியிருக்கின்றேன். ஆகவே, கால்நடை மருத்துவக் கல்லூரி அமைப்பதற்குத் தேவையான நிலங்கள், ஆராய்ச்சி மையங்கள் போன்றவை இருக்க வேண்டும். அதுபோன்ற கட்டமைப்புகள் ஏற்படுத்துவதற்குண்டான வசதிகள் திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்குமென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்குக் கொண்டு சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

***26540—திரு. கே. பழனி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, அறிஞர் அண்ணா பொது மருத்துவமனையை விரிவுபடுத்தி மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனை 53 படுக்கை வசதிகளோடு, நாளொன்றுக்கு 800 புறநோயாளிகள், 50 உள்நோயாளிகள், மாதத்திற்கு 10 பிரசவங்கள் என சிறப்பாக நடைபெறுகிறது. அனைத்துப் பிரிவுகளுமே அங்கிருக்கின்றன. மருத்துவர்கள், செவிலியர்களெல்லாம் எந்தப் பற்றாக்குறையும் இல்லாமல் இருக்கிறார்கள். மேற்கொண்டு என்ன வசதிகள் தேவையோ, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் என்ன வசதிகளை கேட்கிறார்களோ அதை அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

திரு. கே. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதைவிட்டு மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். நேற்றையதினம் எங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து செங்கல்பட்டு மாவட்டம் என்று பிரித்துத் தந்து, மக்கள் மனதில் இடம் பிடித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கள் தொகுதியில் ஸ்ரீபெரும்புதூரில் அறிஞர் அண்ணா பொது மருத்துவமனை இருக்கின்றது. அறிஞர் அண்ணா பொது மருத்துவமனை 6 ஏக்கர் 21 சென்ட் என்ற பெரிய பரப்பளவில் அமைந்திருக்கிற காரணத்தினால், அந்த இடத்தில் ஒரு பெரிய மருத்துவமனையைக் கொண்டு வந்தால், அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், காஞ்சிபுரத்தை அடுத்து ஸ்ரீபெரும்புதூர், ஸ்ரீபெரும்புதூரை அடுத்து பூந்தமல்லி, பூந்தமல்லியை அடுத்து அமைந்தகரை, அமைந்தகரையை அடுத்து கீழ்ப்பாக்கம். இடையில் இருக்கின்ற எங்களுடைய ஸ்ரீபெரும்புதூர் அறிஞர் அண்ணா பொது மருத்துவமனையை, பெரிய மருத்துவமனையாக உருவாக்கித் தந்தால் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க 24 மணி நேரமும் செயல்படக்கூடிய அவசரகால சிகிச்சை மையம் 50 இலட்சம் ரூபாய் செலவில் விரைவில் துவக்கப்படும் என்ற நல்ல செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர்

2019 ஜூலை 19]

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.*

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்றையதினம் எங்களுடைய மாவட்டத்தைப் பிரித்து, செங்கல்பட்டை புதிய மாவட்டமாக உருவாக்கித் தந்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். நேற்றையதினம் செங்கல்பட்டு, திருப்போரூர், பல்லாவரம் போன்ற நகராட்சிகளில் மக்கள் சந்தோஷமாக இனிப்புகளை வழங்கி, பட்டாசுகளை வெடித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மிகப் பெரிய அளவிலே நன்றியைத் தெரிவித்தார்கள். அதனடிப்படையிலே அந்த மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் பகுதிக்கு இன்னொரு துணை சுகாதார நிலையம் தேவை. இருங்காட்டுக்கோட்டை, காட்ரம்பாக்கம் என்பவை பெரிய ஊராட்சிகள். தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்ற அந்த ஊராட்சிகளில் ஒரு துணை சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.*

முற்பகல் 10-50

திரு. ஒய். பிரகாஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதி, அனுமந்தபுரம் ஊராட்சி, நெமிலேரி கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டும். அதேபோல, அந்த ஊராட்சியில் இருக்கக்கூடிய சுகாதார நிலையங்கள் டாக்டர்கள் இல்லாமல் மூடப்பட்டுள்ளன. அந்தப் பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவி வருகின்ற காரணத்தினால், கடந்த வாரம் ஒரு குழந்தைகூட இறந்திருக்கிறது. அந்தச் செய்தி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரிந்திருக்கும். ஆகவே,*

அந்தப் பகுதியில் மூடியிருக்கக்கூடிய சுகாதார நிலையத்தில் மருத்துவ முகாம்களை திறந்து வைத்து, டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இரண்டு தகவல்களுமே தவறான தகவல்களாகும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மருத்துவர்களுடைய தேவை 100 சதவிகிதம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. பொது சுகாதாரத் துறை மற்றும் ஆரம்ப சுகாதாரத் துறையில் ஒரு மருத்துவர் காலிப் பணியிடங்கள்கூட இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை அல்லது திங்கட்கிழமையன்று தொகுதிக்குச் சென்று, எந்த மருத்துவமனையிலாவது காலிப் பணியிடங்கள் இருந்தால், உடனே தெரிவிக்கலாம். மருத்துவர்கள் காலிப் பணியிடங்கள் இல்லை. இரண்டாவது, இந்த ஆண்டு* communicable disease-*ஐ மிகக் கடுமையாக கண்காணித்துக் கொண்டிருக்கின்றோம். டெங்கு காய்ச்சலால் இறப்பு இந்த ஆண்டு இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு என்ன வசதி வேண்டுமென்று கேளுங்கள். கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள், கூடுதல்* ward *இந்தமாதிரி தேவைகள் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இருக்கும். அதைச் சொல்லுங்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மக்கள் நல்வாழ்வுத் துறையின்மூலம் கனிவோடு செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. கந்தசாமி அவர்கள்.*

திரு. ப. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனாகப் பிறந்து, தெய்வமாக இருந்து நம்மையெல்லாம் ஆண்டு கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை*

2019 ஜுலை 19]

தலைமையேற்று நல்லாட்சி செய்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். கடந்த ஞாயிற்றுக்கிழமை குடிமராமத்து திட்டத்தின் மூலமாக, 40 ஆண்டுக்கால கனவாய் இருந்த குளத்தைத் தூர்வாருவதற்கு ஆயத்த பணிகள் செய்து தந்த மக்கள் நாயகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட செஞ்சேரி மலைப் பகுதியில் இருக்கின்ற மருந்தகத்தைத் தரம் உயர்த்திக் கொடுக்குமாறு உங்கள் வாயிலாக மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியில் கம்மனாம்பட்டி, தாளக்கரை, செஞ்சேரிபுத்தூர், குமாரபாளையம் மற்றும் மலையடிப்பாளையம் போன்ற கிட்டத்தட்ட 8 ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் குடியிருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் ஒரு மேல்நிலைப் பள்ளி மற்றும் இதர பள்ளிகள் இரண்டு இருக்கின்றன. மஞ்சனேரி வேலாயுதம் கோயிலுக்கு தினமும் கிட்டத்தட்ட 500 பக்தர்கள் வருகின்றார்கள்; வாரச் சந்தைக்கு கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வருகின்றார்கள். எனவே, சுகாதாரத் துறையிலே இன்று பல, பல திட்டங்களைக் கொண்டுவந்து, நல்ல பணி செய்கின்ற மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவமனையைத் தரம் உயர்த்திக் கொடுக்குமாறு என் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் உங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இந்தக் கோரிக்கையைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதை ஆய்வு செய்து, கருணையோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கோயம்புத்தூரில் பத்திரிகையில் படித்தேன்; பாம்பு ஒன்றுக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள், அந்தப் பாம்பினுடைய நிலை என்னவென்று கேட்டார்கள். அது என்ன பாம்பு என்றும் கேட்டார்கள். அது சாரைப் பாம்பு. அது தீவிர சிகிச்சைக்குப் பிறகு உயிருடன் உள்ளது. உடலிலிருந்த கட்டிகளெல்லாம் அறுவை சிகிச்சை மூலமாக அகற்றப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த பாம்பைப் பார்க்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஏற்பாடு செய்ய தயாராக இருக்கிறேன் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை

***32397—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதியில் கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பண்ருட்டி தொகுதியில் கொய்யா பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.